கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

துளிர் – 4
இதழ் – 1

# துளிர்

அக்டோபர்–2018

விளம்பி ஆண்டு
புரட்டாசி–ஐப்பசி மாதம்

## ஒரு கதை சொல்லட்டா தம்பி ?

ஒரு கதை சொல்லட்டா தம்பி ?

காட்டுக்குள்ளே இருக்கும் முருங்கை மரத்தில் தலைகீழாய் தொங்குவேன்.
என்னைக் கொண்டு போக ஒரு மாமன்னன் வருவான். அவன் தோளிலே என்னைத் தூக்கிப் போடுவான். நான் பயங்கரமாகச் சிரித்துவிட்டு ஒரு கதை சொல்வேன்.. முடிவில் ஒரு கேள்வி கேட்பேன்.. நீ அதற்குச் சரியாக பதில் சொல்லாவிட்டால் உன் தலை சுக்குநூறாய் வெடித்துவிடும் என்பேன்..
சொல்வானா அந்த வேந்தன்? நான் யார்? அவன் யார்? காத்திருங்கள் அடுத்த இதழில் உங்களைச் சந்திக்கிறேன்..

*- விஷ்வசாந்தி*

## கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை, அதே விலையில் *smile.amazon.com* இணையதளம் மூலம் பெறுங்கள்.
2. நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி, அமேசான் (Amazon) நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.
3. "DFW tamil foundation" என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்


NCA CASI • NWAC • SACS CASI
ACCREDITED
AdvancED
This is to certify that
Coppell Tamil Learning Center
has met the criteria for educational quality established by the AdvancED® Accreditation Commission and is hereby presented this
Certificate of Accreditation
by the NCA Commission on Accreditation and School Improvement, the Northwest Accreditation Commission, and the SACS Commission on Accreditation and School Improvement.
Valid Through Date
6/30/2023
Creating a world of opportunities for every learner.
Mark A. Elgart
Mark A. Elgart, Ed.D.
President and CEO, AdvancED®

நமது கோப்பல் பள்ளிக்குத் தகுதி அங்கீகாரம் வழங்குவதற்கான ஆய்வு 25 மார்ச், 2018 அன்று நடைபெற்றது. இந்த ஆய்விற்காக ஆசிரியர்குழு கடுமையாக உழைத்து ஆவணங்களை ஆயத்தம் செய்தனர். கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் நடந்த இந்த ஆய்வில், ஆய்வுக்குழுவினர் பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடி பள்ளியின் செயல் முறைகளைக் கேட்டறிந்தனர். வகுப்புகளில், குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் முறையையும் ஆய்வு செய்தனர். இதனடிப்படையில், நமது பள்ளிக்குத் தகுதி அங்கீகாரம் அளித்து, நமது பள்ளியின் செயல்பாடுகளை வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இனி வரும் கல்வி ஆண்டில் பயிலும் குழந்தைகள், உயர்நிலைப் பள்ளிக்கான மொழி அங்கீகாரத்திற்குத் தகுதி உடையவர்கள் ஆவர். இது நம் பள்ளிக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

**-கோப்பல் தமிழ்க் கல்வி மையம்**

# மாணவர் பக்கம்




*கோப்பல் தமிழ்க் கல்வி மையத்தின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் மிகச்சிறப்பாக மெக்கார்த்தர் உயர்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் மே 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது. பாரம்பரிய உடையணிந்து வந்த நம் பள்ளிக் குழந்தைகளால் அந்த இடமே வண்ண விழாக்கோலம் பூண்டிருந்தது. பெரியவர்கள், குழந்தைகள் என கிட்டத்தட்ட முன்னூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்புறச் செய்தனர்.*

*உயிர் ஓவியங்களாய் வந்தவர்களை, நமது பள்ளியின் தன்னார்வல நண்பர்கள் நிழல் ஓவியங்களாய் தங்கள் புகைப்படக்கருவியில் (Camera) பதிவு செய்தனர். குழந்தைகள் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதேத் தொடங்கியது. நம் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து அருமையாக நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். அடுத்ததாக வந்த தொடக்க நிலை சிறார்களின் அரிச்சுவடிப் பாடல்கள் நம் காதுகளில் தேனாய் ஒலித்தது என்றால் மிகையில்லை. மழலைநிலையின் "சின்னச் சின்ன ஆசை" பாடலும் அதனைத் தொடர்ந்த நடனமும் செவிக்கு மட்டுமல்லாது கண்களுக்கும் விருந்தானது.*

*"வீர விநாயகரை" அழைத்து ஆடிய குழந்தைகள், பழமையையும் பாராட்டும் விதமாக "அவளுக்கென்ன அழகிய முகம்" எனத் துள்ளி, வரவு எட்டணாவாக இருக்கும் போது செலவு பத்தணவா?!? என ஆடி மகிழ்வித்தனர். பாரதியின் தமிழ் வாழ்த்து நடனம் அனைவரையும் பெருமையுடன் நிமிரச் செய்தது என்றால், வில்லுப்பாட்டும், கிராமிய நடனங்களும் நம்மைப் பரவசப்படுத்தியது. "சொடக்குமேல சொடக்கு போட்டு" ஆடி "ஆளப்போறான் தமிழன்" என உற்சாகப் படுத்தியதுடன், "வாங்க படமெடுக்கலாம்" எனத் தங்களது நடிப்புத் திறமையையும் காட்டினர். பஞ்சபூதங்களின் சீற்றத்தால் விளையும் அழிவைப்பற்றி காட்டியவர்கள், உயிராய் இருக்க வேண்டிய விவசாயிகளின் அவலத்தை நடிப்பில் காட்டி காண்பவரை உலுக்கிப் போட்டார்கள். தொடர்ந்து பழங்கால மன்னர்களின் நவயுக பிக் பாஸ் நாடகம் அனைவரையும் நகைச்சுவை மழையில் நனைத்தது.*

*இதனிடையே, ஆசிரியர்களையும், தன்னார்வலர்களையும் கௌரவித்து பெருமைப்படுத்தினர். பள்ளியின் இறுதி நிலையை வெற்றிகரமாக முடித்த மாணவர்களைச் சிறப்பித்தனர். மேலும் அனைத்து குறள்களையும் ஒப்புவித்து குறளரசர் பட்டம் வென்ற நமது பள்ளி ஆசிரியர் செந்திலை கௌரவித்தனர். நமது தமிழ்ப் பள்ளி மாணவர்களையும் உற்சாகப் படுத்தும் விதமாகக் கோப்பைகள் வழங்கப்பட்டது. இறுதியாக, செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பதற்கேற்ப, அறுசுவை விருந்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது. விழாவிலிருந்து சில நிமிடங்கள் பக்கம் ஐந்து, ஆறு, ஏழில் புகைப்படங்கள் வாயிலாக...*

## 'தில்' இருந்தா சொல்லுங்க

*துளிர் பரிசுப் போட்டிகள்:*

*ஒவ்வொரு மாதமும் துளிர் இதழில் பரிசுப் போட்டிகளை வெளியிட உள்ளோம். கீழ்கண்ட பிரிவுகளில் மாணவர்கள் பிரிக்கப்பட்டு அந்த அந்த நிலைக்கேற்றவாறு போட்டிகள் நடத்தி பரிசுகளும் கொடுக்க உள்ளோம்.*

*பிரிவு 1: மழலை மற்றும் ப்ரீ.கே (prek) மாணவர்கள்*
*பிரிவு 2: நிலை 1 ,நிலை 2 மற்றும் ட்ரான்சிஷன் (transition) மாணவர்கள்*
*பிரிவு 3: நிலை 3 மற்றும் நிலை 4 மாணவர்கள்*
*பிரிவு4: நிலை 5 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்கள்.*

*பிரிவு 4 புதிருக்கான மாதிரி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது..*

1. *ஒரு மாம்பழக் கூடையில் 100 மாம்பழங்கள் இருந்தன. கடைக்காரரிடம் நீ எத்தனை மாம்பழங்கள் கேட்டாலும் கூடையுடன் தான் தருவார். நீ மாம்பழம் கேட்ட பின்பு பழங்களை எடுக்க மாட்டார். முன்பே கூடையில் நிரப்பி வைப்பார். 1 இல் இருந்து 100 க்குள் எத்தனை மாம்பழம் வேண்டுமானாலும் நீ கேட்கலாம். அவர் எப்படி பிரித்து வைத்தால் அது சாத்தியம் ?*



*மேலும் விவரங்களுடன் அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறோம்*

## குறள் சொல்லும் பொருள்

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று**

சொற்பதம் :
வான்நின்று -மழை இடையறாது பெய்து
உலகம் வழங்கி வருதாலால் - உலகை நிலைபெறச் செய்வதால்
தான்அமிழ்தம் என்றுணரற்பாற்று – அதுவே அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்

*மழையை அமிழ்தம் என்று வள்ளுவர் அழைப்பது எதனால் ?*

அமிழ்தம் என்பது சாகா மருந்து. எண்ணற்ற ஆண்டுகளாக உயிரினங்களை இந்த உலகில் தொடர்ந்து வாழ வைப்பது மழை. நீர் இருக்கும் இடத்தில் மட்டுமே உயிரினங்கள் இருக்கும் என்று இப்போது விஞ்ஞானிகள் நீர் இருக்கும் கோள்களைத் தேடி ஆராய்ச்சி செய்கின்றனர். அதனால் மழையே உலகின் அமிழ்தம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

*அருண்*

## காலத்தை வென்றவர் – டாக்டர். சிவா அய்யாதுரை




இன்று உலகமெங்கும் தகவல்களை பரிமாறிக் கொள்ள உதவியாய் இருக்கக்கூடிய மின்னஞ்சலை (EMAIL)கண்டுபிடித்தவர் ஒரு தமிழர் என்று உங்களுக்குத் தெரியுமா ?அவர் பெயர் சிவா அய்யாதுரை. பதினான்கு வயதில் உயர்நிலைப் பள்ளியில் இருந்தபோதே இந்தச் சாதனையை நிகழ்த்தினார். அமெரிக்கவாழ் தமிழரான இவர் 1978 ஆம் ஆண்டிலேயே மின்வழி அஞ்சல்களை அனுப்பும் முறைமையும், மின்னஞ்சல் என்பதை ஈமெயில் என்னும் பெயரிலும் உருவாக்கி நிறுவியவர். 1982 ஆம் ஆண்டு பல சர்ச்சைகளுக்குப் பின் ஈமெயில் தன்னுடைய கண்டுபிடிப்பு என்று காப்புரிமை வாங்கினார். கணினி வரலாற்றில் மறக்க முடியாத ஒரு பெயராக இத் தமிழனின் பெயரும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

*- விஷ்வசாந்தி*

## எட்டு வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்



## எண்களை வரிசையில் இணைக்கவும்




## தோழா தோழி

வா தோழா சாப்பிட்டாயா ?

ஆம், தோழி இன்று ஒரு திருமணத்திற்குப் போயிருந்தேன். அங்கே அறுசுவை விருந்து சாப்பிட்டேன்.

ஓ ..எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் .. அறுசுவையில் எனக்கு இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம் தான் தெரியும். மீதி இரு சுவைகள் என்ன ?

நல்ல கேள்வி, எனக்கும் அந்தச் சந்தேகம் இருந்தது. பின்பு அம்மாவிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். உவர்ப்பு மற்றும் துவர்ப்பு ஆகியவையே அந்த இரு சுவைகள்.

அப்படி என்றால் ?

உவர்ப்பு என்பது உப்பின் சுவை. மாதுளம் ,வாழைப்பூ, பாக்கு போன்றவை துவர்ப்பு சுவையுடையன.

நன்றி தோழா நீண்ட நாள் சந்தேகம் தீர்ந்தது. *-விஷ்வசாந்தி*

## விடுகதை 

*1.* வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு உள்ளே உள்ளதை எறிந்தான். அது என்ன ?

*2.* இறக்கையை விட மென்மையானது. ஆனால் உலகின் பலமிக்க மனிதரால் சில நிமிடங்கள் கூட பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன ?

*விடை அடுத்த இதழில்...*



### கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

***பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.***

### கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

***இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
***கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468* *http://coppelltamil.com/calendar.htm*




























விவசாயின் உசுரு
மண்ணு...






ஆண்டு விழா 2017-18


கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
ஆண்டு விழா 2017-18
இருப்பாய் தமிழா
நெருப்பாய்


ஆண்டு விழா
மண்